

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மார்ச் 10, 2022 | புரட்சி 21 | முழக்கம் 08 | விலை: ரூ.3.00


## தமிழகத்தை உலுக்கிய கோகுல்ராஜ் ஜாதிவெறிக் கொலை

# குற்றவாளிகளுக்கு தண்டனை உறுதியானது

***சேலம் பொறியியல் கல்லூரி மாணவர் கோகுல்ராஜ் சாதி ஆணவ கொலை வழக்கில் யுவராஜ் உள்ளிட்ட பத்து பேர் குற்றவாளிகள் என்று மதுரை மாவட்ட வன்கொடுமை தடுப்பு சிறப்பு நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத் தக்கது. இந்த வழக்கில் தண்டனை மார்ச் 8ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ளது.***

இந்த வழக்கு பல்வேறு தடைகளைத் தாண்டி நீண்ட நெடிய காலம் நடந்து வந்துள்ளது. 2015ஆம் ஆண்டு நடந்த கொலையில் தற்போதுதான் தீர்ப்பு வந்துள்ளது.

சாதி ஆணவப் படுகொலையான இந்த வழக்கை விசாரித்து வந்த திருச்செங்கோடு காவல்துறை கண்காணிப்பாளர் விஷ்ணுபிரியா உயரதிகாரி களின் நிர்ப்பந்தம் காரணமாக கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலைக்கு காரணமானவர்கள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. அதுகுறித்த விசாரணையும் கூட நடை பெறவில்லை. கோகுல்ராஜ் கொலைக்கு நீதி கிடைத்துள்ளதுபோல விஷ்ணுபிரியா தற்கொலை வழக்கிலும் நீதி நிலை நாட்டப்பட வேண்டும். அவரது தற்கொலைக்குக் காரணமான உயரதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

அதிமுக ஆட்சிக் காலத்தில் நடந்த இந்த கொலையில் குற்றவாளிகளைக் காப்பாற்ற பல்வேறு முயற்சிகள் சாதி ஆணவ சக்திகளால் மேற்கொள் ளப்பட்டன. விஷ்ணுபிரியா தற்கொலையும் இதன் ஒரு பகுதியாகும். இந்த வழக்கு சிபிசிஐடி போலீசார் விசாரணைக்கு மாற்றப்பட்டதும் கூட கடுமையான சமூக அழுத்தத்திற்கு பிறகு நடந்தது.

நாமக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்த நிலையில் அரசுத் தரப்பு சாட்சிகள் பலரும் பிறழ் சாட்சிகளாக பல்டிய டித்தனர். கோகுல்ராஜின் தாயார் சித்ரா அளித்த மனுவின் அடிப்படையிலேயே மதுரை மாவட்ட வன்கொடுமை வழக்குகளுக்கான நீதிமன்றத்தி ற்கு இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தால் மாற்றப்பட்டது.


இந்த வழக்கில் திறம்பட வாதாடிய அரசு சிறப்பு வழக்கறிஞர் ப.பா.மோகன் மற்றும் கோகுல் ராஜ் வழக்கறிஞர் பார்த்திபன் ஆகியோர் இந்த வழக்கை பல்வேறு நிர்ப்பந்தங்களுக்கு இடையே திறம்பட கையாண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனையை உறுதி செய்துள்ளது பாராட்டத்தக்கது. அரசு தரப்பு வழக்கறிஞரான தமக்கு அரசு உரிய முறையில் ஒத்துழைக்கவில்லை என்றும் குறைந்தபட்ச வசதிகள் கூட செய்து தரப்படவில்லை என்றும் வழக்கறிஞர் ப.பா.மோகன் கூறியுள்ளார்.

## கோகுல்ராஜ் கொலை: கழகம் எடுத்த தொடர் போராட்டங்கள்

*தலித் சமூகத்தைச் சார்ந்த பொறியியல் பட்டதாரி கோகுல்ராஜ், ‘கவுண்டர்’ சமூகத்தைச் சார்ந்த பெண்ணை காதலித்த குற்றத்துக்காக கவுண்டர் சமூகத்தைச் சார்ந்த சில ஜாதி வெறியர்கள் கோகுல்ராஜ் தலையைத் துண்டித்து, பள்ளிப்பாளையம் கிழக்கு தொட்டிப்பாளையம் அருகே தண்டவாளத்தில் வீசி ‘தற்கொலை’ என்று ஏமாற்ற முயன்றனர். திராவிடர் விடுதலைக் கழகம் உண்மைக் குற்றவாளிகளைத் தண்டிக்கத் தொடர்ந்து போராட்டங்களை நடத்தியது.*

- *ஜாதிவெறிக் கும்பலை உடனே கைது செய்து வழக்கை சி.பி.சி.அய்.டி. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை விடுத்தார். (‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஜூலை 2, 2015)*
- *வழக்கில் தேடப்படும் குற்றவாளியான யுவராஜ் என்பவர், தலைமறைவாகி காவல்துறைக்கு சவால் விடும் ‘வாட்ஸ்அப்’ பதிவுகளை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து, 19.7.2015இல் தர்மபுரியில் கூடிய கழகச் செயலவைக் கூட்டத்தில், காவல் துறையில் ஊடுறுவியுள்ள ஜாதிய மனநிலையைக் கண்டித்தும் அவர்களின் அலட்சியப் போக்கால் தான் தேடப்படும் குற்றவாளிகள், காவல்துறைக்கு சவால் விடுகின்றனர் என்றும் தீர்மானம் நிறைவேற்றியது. மாவட்ட காவல்துறை அதிகாரிகளாக அம்மாவட்டத்தில் ஆதிக்க ஜாதியாக இருக்கும் பிரிவைச் சார்ந்தவர்களை நியமிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தியது.*
- *மேற்குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்தியும் திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து நடத்தி வரும் ஜாதி எதிர்ப்பு பரப்புரைகளுக்கு காவல்துறை தடைபோடுவதை நிறுத்தி அனுமதிக்க வற்புறுத்தியும் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் சட்டம் ஒழுங்குப் பிரிவு காவல்துறை இயக்குனரிடம் சென்னையில் 1.7.2015 அன்று கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.*
- *கொலையைக் கண்டித்து திருச்சியில் கழகம் சார்பில் உடன்பாடுள்ள அமைப்புகளை இணைத்து கண்டன ஆர்ப்பாட்டம் 3.7.2015 அன்று நடத்தப்பட்டது.*
- *2015 ஆகஸ்ட் 17 அன்று திருச்செங்கோட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் திருச்செங்கோடு காவல்துறை முற்றுகைப் போராட்டம் கழக சார்பில் நடந்தது. 200 தோழர்கள் கைதானார்கள். அப்போது குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 82ஆவது பிரிவின் கீழ் தேடப்படும் யுவராஜ் என்பவரை ‘அறிவிக்கப்பட்ட குற்றவாளி’ என்று அறிவிக்க வேண்டும் என்றும் 83ஆவது பிரிவின்படி அவரின் சொத்துக்களை முடக்கி சரணடைய செய்ய வேண்டும் என்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வலியுறுத்தினார்.*
- *இந்த முற்றுகைப் போராட்டத்தைத் தொடர்ந்து மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்த காவல் ஆய்வாளர் சக்கரபாணி, நாமக்கல்லுக்கு மதுவிலக்குப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். தொடர்ந்து கழகம் வலியுறுத்தியபடி ஆதிக்க ஜாதியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தலித் காவல்துறை அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று தலித் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் திருச்செங்கோடு காவல் நிலையத்துக்கு ஆய்வாளராக நியமிக்கப் பட்டார். அதேபோல் யுவராஜ் தேடப்படும் குற்வாளியாக அறிவிக்கப்பட்டார். சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் நோட்டீஸ் அவரது வீட்டிலும் அவர் நடத்தும் ஜாதி சங்கக் கட்டிடத்திலும் ஒட்டப்பட்டது. வழக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டது.*
- *காக்கி சட்டையைக் கழற்ற வைப்பேன்; கவுண்டர்கள் அணி திரள வேண்டும் என்று தலைமறைவாக இருந்து யுவராஜ் பேசிய வெறிப் பேச்சுக்களை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ தொடர்ந்து வெளியிட்டு வந்தது.*
- *மாவட்ட காவல்துறை பெண் அதிகாரியாக இருந்த தலித் சமூகத்தைச் சார்ந்த விஷ்ணு பிரியா, ஜாதிவெறியர்களின் அழுத்தத்தால் தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வலியுறுத்தியது.*

## வழக்கின் வெற்றிக்கு அயராது உழைத்த வழக்கறிஞர் ப.பா. மோகன்



*பல்வேறு தடைகளை சந்தித்து வழக்கறிஞர் ப.பா.மோகன், வழக்கின் வெற்றிக்கு மிக முக்கிய பங்காற்றினார். செய்தியாளர்களிடம் பேசிய அவர், 42 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்; பிறகு அவர்கள் பிறழ் சாட்சிகளாக மாறி விட்டனர். கோகுல் ராஜ் வகுப்புத் தோழியான சுவாதி முதலில் தன்னிடமிருந்து கோகுல்ராஜ் பிரிக்கப்பட்டு, கடத்தப்பட்டதையும் செல்போன் பிடுங்கப்பட்டதையும் ஒப்புக் கொண்டாலும் பிறகு பிறழ் சாட்சியாகி விட்டார்.*

*உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு விசாரணை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறினாலும் சாட்சியங்கள் அப்படியே இருந்தன. 106 சாட்சிகள் அளித்த சாட்சியங்களையும் 500 ஆவணங்களையும் 700 பொருள்களையும் பரிசீலித்து சந்தர்ப்ப சூழலை முன் வைத்து வழக்கை நடத்தினோம். அரசு தரப்பு ஒத்துழைப்பும் அவ்வளவாக இல்லை. இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு காவல்துறை அதிகாரிகள் சிறப்பான ஒத்துழைப்பைத் தந்தனர். சம்பவம் நடந்த இடத்தில் நிறுவப்பட்ட சி.சி.டி.வி. கேமரா மற்றும் உடற்கூறு ஆய்வுகள் அறிக்கைகளைக் கொண்டு அறிவியல் ரீதியாக குற்றம் நிரூபிக்கப்பட்டது என்றார் ப.பா.மோகன். அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு கடமையாற்றியபோதும் அவருக்கு ஊதியம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. ஒவ்வொரு முறை வழக்கிற்கு சொந்த செலவிலேயே வந்து சென்று வழக்கை நடத்தினார் என்பது குறிப்பிடத் தக்கது.*

## இது உண்மையா? : தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் ஊடுருவிய ஆர்.எஸ்.எஸ். பேராசிரியர்கள்

*பாரதிய சிக்ஷா மண்டல் எனும் வலதுசாரி இந்து அமைப்பு கல்லூரி பல்கலைக்கழக பேராசிரியர்கள் இடையே வேகமாக பரவி வருகிறது. 1969 இல் தொடங்கப்பட்ட இந்த அமைப்பின் தலைமையகம் நாக்பூரில் உள்ளது. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு கல்லூரி, பல்கலைக் கழகங்களிலும் கிளைகளை தொடங்கி இருக்கிறார்கள். உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் விஜயபாரதம் இதழின் சந்தாதாரர் ஆக்கப்பட்டு மாதந்தோறும் இதழ் அனுப்பி வைக்கப்படுகிறது.*

*பல்கலைக்கழக சிண்டிகேட், செனட் உறுப்பினர்கள் போன்ற பதவிகளுக்கு யாரை நியமிக்க வேண்டும் என்று இந்த உறுப்பினர்களிடையே விவாதிக்கப்படுகிறது. மத்திய அரசு நம்மிடையே உள்ளது கவர்னர் அலுவலகம் நமது கையில் உள்ளது ஆகவே உயர்கல்வித் துறையில் உயர் பதவிகளை நம்மால் மட்டுமே அடைய முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஊட்டப்படுகிறது. இதில் உறுப்பினர்களாக இருக்கும் பெரும்பாலானவர்கள் சங்க அனுபவம் கொண்டவர்களோ சமூக நீதிக்காக பாடுபடுபவர்களோ கிடையாது அவர்கள் தங்களுக்கு பதவி வேண்டும் என்ற நோக்கத்தை கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் தொடர்ச்சியாக இவர்கள் ஆர்எஸ்எஸ்சின் கிளைகளான விஎச்பி, ஏபிவிபி போன்ற அமைப்புகளின் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். பிஎஸ்எம் அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள பேராசிரி யர்கள் தங்களது துறைகளில் வலதுசாரி சிந்தனை கொண்ட மாணவர்களை சேர்த்து அவர்கள் மூலமாக ஏபிவிபி எனும் இந்து மாணவர் அமைப்பை வளர்க்கின்றனர்.*

***இது உண்மையா?***

*நேற்று பெரியார் பல்கலைக் கழக துணைவேந்தர், தமிழ்த்துறைப் பேராசிரியர் பெரியசாமி, சிண்டிகேட் உறுப்பினர் குமாரசாமி (ஆர்.எஸ்.எஸ். நபர்) ஆகியோர் இரகசியமாக கலந்துரையாடி, இந்த ஆண்டு இறுதிக்குள் உறுப்புக் கல்லூரிகளில், 111 பாரதீய சிக்ஷா மண்டல் கிளைகளை நிறுவ வேண்டுமென இலக்கு நிர்ணயித்து உள்ளார்களாமே!*

தலையங்கம்

## அண்ணா தொடங்கிய ‘திராவிடன் மாடல்’

1967 மார்ச் 6, அண்ணா தலைமையில் பார்ப்பனரல்லாத அமைச்சரவை கடவுள் பெயரால் உறுதி ஏற்காமல், ‘உளமாற’ என்ற உச்சரிப்போடு தமிழ்நாட்டில் பதவியேற்று திராவிட ஆட்சிக்கு அடித்தளமிட்டது. 55 ஆண்டுகள் தமிழ்நாட்டில் தி.மு.க.வும் அ.இ.அ.தி.மு.க.வும் மாறி மாறி ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு வந்திருக்கின்றன.

இந்திய தேர்தல் அரசியல் வரலாற்றிலேயே தேர்தலுக்கான கூட்டணி என்ற நடைமுறையை உருவாக்கிக் காட்டியவர் அண்ணா. காமராசரை வீழ்த்த அண்ணாவைப் பயன்படுத்திக் கொள்ள இராஜகோபாலாச்சாரியின் சுதந்திரா கட்சி, தி.மு.க. கூட்டணியில் இடம் பிடித்தது. பெரியார் உறுதியாக காமராசரை ஆதரித்தார். இராஜகோபாலாச்சாரி, “பெரியாரின் கொள்கையிலிருந்து அண்ணா விலகி வந்து விட்டார்; ‘பெருங்காய டப்பா’வாகத்தான் இருக்கிறார். பெரியார் கொள்கையான ‘பெருங்காயம்’ இப்போது அண்ணாவிடம் இல்லை” என்று தனது பார்ப்பன சமூகத்துக்கு உறுதியளித்தார்.

தேர்தலில் 137 இடங்களில் தி.மு.க. வெற்றி பெற்று தனித்து ஆட்சி அமைத்தது. ஆச்சாரியாரை கைவிட்டு அண்ணா பெரியாரை சந்திக்க திருச்சிக்கு தனது முக்கிய அமைச்சர்களுடன் வந்து விட்டார். தி.மு.க., சுதந்திரா கட்சியின் ‘தேனிலவு’ முடிந்து விட்டது என்று ஆச்சாரியார் கூறினார். ‘ஆமாம்; உண்மையான வாழ்க்கை பெரியாருடன் தொடங்குகிறது’ என்று பதிலளித்தார் அண்ணா. வரலாற்றிலே திராவிடத்திடம் ஆரியம் ஏமாந்து நின்ற சாதனையை நிகழ்த்தினார் அண்ணா. பெரியார் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார்.

சுயமரியாதைத் திருமணத்துக்கு சட்ட வடிவம்; தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை; தமிழ்நாட்டுக்கு – தமிழ்நாடு என்று பெயர் சூட்டல் என்று முப்பெரும் சாதனைகளை செய்து காட்டிய அண்ணா, இனி எதிர்காலத்தில் இந்த மூன்று திட்டங்களையும் ஒழித்துவிட்டு எவரும் ஆட்சி செய்ய முடியாது; இத்திட்டங்கள் நீடிக்கும் வரை அது அண்ணாத்துரை ஆட்சி தான் என்று பூரிப்போடு அறிவித்தார். அரசு அலுவலகங்களில் கடவுள் படங்கள் அகற்றப்பட்டன. மத்திய அமைச்சர் காஞ்சிபுரம் கோயில் தரிசனத்துக்கு வந்தபோது அண்ணாவை உடன்வர அழைத்தபோது அண்ணா மறுத்துவிட்டார். அறநிலையத் துறை அமைச்சரான சீரிய பகுத்தறிவுவாதி நாவலர் நெடுஞ்செழியன், சிதம்பரம் நடராசன் கோயிலை சோதனையிடச் சென்றபோது தீட்சதர்கள் வழங்கிய விபூதியை ஏற்க மறுத்தார். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற பெரியாருக்கு, ‘தியாகிகள் மான்யம்’ வழங்கப்படுமா என்று காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சட்டசபையில் கேட்டபோது, ‘இந்த அமைச்சரவையையே பெரியாருக்கு காணிக்கையாக்கியிருக்கிறோம்’ என்றார் அண்ணா.

1959ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியை தி.மு.க. முதன்முதல் கைப்பற்றியது. அப்போது அண்ணா தொண்டர்களுக்கு ஒரு வேண்டுகோளை முன் வைத்தார். மாநகராட்சிக் கட்டிடத்துக்குள் அடி எடுத்து வைப்பதற்கு முன்பு அங்கே சிலையாக நிற்கும் சர். பிட்டி தியாகராயருக்கு ஆளுயர மாலை அணிவித்து “மகானே! நீங்கள் தான் எங்கள் தமிழர் சமுதாயத்துக்கு அறிவூட்டினீர்கள்; உங்களின் வழி வந்தவர்கள் நாங்கள்; நாங்கள் உங்களை மறக்கவில்லை என்று வீரவணக்கம் செலுத்திவிட்டு கடமையாற்றிடப் புறப்படுங்கள்” என்று எழுதினார்.

வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து தென்னாட்டை விடுவித்துக் கொள்ள திராவிட சமதர்ம கூட்டரசு எனும் இன வழி கூடி, மொழி வழி பிரிந்து அமையும் பிரிந்து செல்லும் உரிமையோடு கூடிய திராவிட சமதர்ம கூட்டரசை முன்மொழிந்த அண்ணா, காலத்தின் சூழல் கருதி மாநில சுயாட்சியை முன் வைத்தார்.

ஒரு தேசம் என்பது எல்லைகளால் தீர்மானிக்கப்படுவது அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்வுகள் உரிமைகளால் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்திய தேசத்துக்கு மாற்றாக மதவாத தேசியத்தை ‘அகண்ட பாரதம்’ பேசி வந்தது ஆர்.எஸ்.எஸ்.

மொழி வழி மாகாணங்கள் பிரிவினை நடந்த பிறகும் மதவாதத்தில் ஊறிப் போன வடமாநிலங்கள் அது குறித்த விழிப்புணர்வைப்பெறவில்லை. பார்ப்பனிய சனாதன பிற்போக்கு சிந்தனையிலேயே மூழ்கிக் கிடந்த ன. உ.பி. அரசிடம் பெயர் சூட்டுவது குறித்து மொழி வழிப் பிரிவினைக்கான ஆணையம் கருத்து கேட்டது. இந்துஸ்தான் என்ற பெயரை முதலில் கூறினார்கள்; நேரு ஏற்க மறுத்தார். பிறகு ‘ஆரிய விரத்’ என்ற பெயரை பரிந்துரைத்தார்கள்; அதுவும் ஏற்கப்படவில்லை. பிறகு ‘இராமராஜ்யம்’ என்ற பெயரை பரிந்துரைத்தார்கள்; அதுவும் ஏற்கப்படாத நிலையில் நேருவே ‘உத்திர பிரதேசம்’ என்ற பெயரைப் பரிந்துரைத்தார். (ஆதாரம்: அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழக ஆய்வறிஞர் பிரேரிணாசிங் கட்டுரை – ‘மாபெரும் தமிழ்க் கனவு’ நூல்)

இந்தியாவே உ.பி. தான் அதுவும் இந்து தேசமே இந்தியா என்ற மனநிலையில் உ.பி. மட்டுமல்ல; இந்தி பேசும் ‘பசு மாட்டுப் பிரதேசங்களின்’ மனநிலையாகவே இருந்தது; இப்போதும் இருக்கிறது. மாறாக அண்ணா இறுதி வரை மாநில சுயாட்சிக்கு குரல் கொடுத்தார். இறுதி காலத்தில் ‘காஞ்சி’ பொங்கல் மலருக்கு (1969) எழுதிய கட்டுரையிலும் மாநில சுயாட்சியையே வலியுறுத்தினார்.

ஒற்றை ஆட்சியை நோக்கிய இலக்குடன் ஒன்றிய ஆட்சி அவசர அவசரமாக மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து வரும் சூழலில் முன்னெப்போதையும் விட அண்ணா முன்மொழிந்த மாநில சுயாட்சி கோரிக்கையை இப்போது வலியுறுத்த வேண்டியிருக்கிறது. தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அண்ணா ஆட்சி அமைத்த நாள் குறித்து வெளியிட்ட அறிக்கையில், ‘இனப் பகைவரும் மற்றும் அவர் தம் கூலிகளும் எத்தனை அரிதாரம் பூசி வந்தாலும், பெரியார்–அண்ணா–கலைஞர் காட்டிய வழியில் தமிழ்நிலத்தை வாளும் கேடயமும் நின்று தி.மு.க. காக்கும்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் கூறிய அந்த இனப் பகைவர்கள் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நிதியைத் தர மறுக்கிறார்கள். தமிழகக் கல்வி உரிமையைப் பறிக்கிறார்கள். நீட், ஜிஎஸ்.டி., சமஸ்கிருத–இந்தித் திணிப்புகள் தொடருகின்றன. தமிழக முதல்வர் மக்கள் பேராதரவோடு அண்ணாவின் கொள்கைப் பாதையில் தமிழ்நாட்டின் தொழில் – கல்வி – பொருளாதாரம் – சமூக நலத்துக்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகிறார். இது கேடயம்; ஒன்றிய ஆட்சியோடு உரிமைக்குப் போராடுகிறார்; இது வாள்; பா.ஜ.க. அல்லாத மாநில முதல்வர்களை தலைவர்களை ஒரே குடையின் கீழ் அணி திரட்டும் முதல்வரின் முயற்சிகள் ஒன்றிய ஆட்சிக்கு நடுக்கத்தை உருவாக்குகின்றன. பெரியார் பேசிய சுயமரியாதை அடையாளம்; சமூக நீதிக் கோட்பாடு; தன்னாட்சி இலக்குகள்; இப்போது காலத்தின் தேவையாக மாறியிருப்பதைப் பார்க்கிறோம். ‘நீட்’ எதிர்ப்புக் குரல் கருநாடகத்திலிருந்து கேட்கிறது. ஆளுநர் அதிகாரங்களைப் பறிக்க வேண்டும் என்று கேரளாவும் மேற்கு வங்கமும் களத்தில் இறங்கியிருக்கிறது. புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும் என்கிறார், தெலுங்கானா முதல்வர். தமிழ்நாடு தான் வழிகாட்ட வேண்டும் என்கிறார் ராகுல் காந்தி.

அண்ணாவின் ஆட்சி தமிழ்நாட்டில் தொடங்கி வைத்த திராவிட இயக்கக் கொள்கைகள், ஏனைய மாநிலங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியிருக்கிறது. ‘கடமை–கண்ணியம்–கட்டுப்பாடு’ என்று தொண்டர்களுக்கு ஒழுக்க நெறிகளை வரையறுத்தார் அண்ணா; அந்த முழக்கங்களுடன் ‘சுயமரியாதை–சமூக நீதி–சமத்துவம்’ என்ற கொள்கை இலக்கையும் இப்போது இணைத்து, திராவிடர் இயக்கம் தன்னை மேலும் செழுமையாக்கியிருக்கிறது. இதுவே அண்ணா காட்டிய திராவிடன் மாடல்!

# அய்.நா. அங்கீகரிக்கும் “திராவிடன் மாடல்”

சென்னையில் நடைபெற்ற தனியார் தொலைக்காட்சியின் கருத்தரங்கில் தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: ஒன்றிய அரசு கொண்டுவரும் ஒரே நாடு என்ற கருத்தாக்கத்தை பொருளாதார ரீதியில் ஏற்க முடியாது. கூட்டாட்சி தத்துவத்தை அனுசரித்து செயல்பட்டால்தான் நாடு வளர்ச்சி காணும். அதேவேளையில், பிற மாநிலங்களை விட தமிழகம் பெரும்பாலான துறைகளில் சிறந்து விளங்குகிறது. ஆனால், மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டுகிறது. தமிழ்நாட்டின் தனிநபர் வருவாய் குஜராத்தை விட 10 இல் இருந்து 15 ஆயிரம் குறைவுதான். நிதி மேலாண்மையில் குஜராத் சிறப்பாக செயல்படுகிறது. மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் 15 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளில் 100 சதவீதம் பேர் பள்ளிக்கு செல்கிறார்கள். பள்ளிக்கு போகாத 15 வயதிற்கு உட்பட்ட பெண்களே தமிழ்நாட்டில் இல்லை. அதே வேளையில், குஜராத்தில் 15 முதல் 20 சதவீதம் பெண்கள் பள்ளிக்கூடம் போவதில்லை. இது எந்த மாதிரி வளர்ச்சி? அதுமட்டுமல்லாது, தமிழ்நாட்டில் ஆயிரம் பேருக்கு நான்கு மருத்துவர்கள் இருக்கிறார்கள். அதே குஜராத்தில் ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் தான் இருக்கிறார். இதில் எந்த சமூக நிலையை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்? உள்நாட்டு உற்பத்தியான ஜிடிபி மட்டுமே வளர்ச்சியை நிர்ணயிக்காது. நாங்கள் எங்களுக்கென தனி வழி வைத்திருக்கிறோம், அது எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக இருக்கும். அதற்கு பெயர் திராவிட மாடல். இவ்வாறு அவர் பேசினார். அமைச்சரின் பேச்சு நாடு முழுவதும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதே கருத்தை அய்.நா.வும் வலியுறுத்தியிருக்கிறது.

**தனிநபர் வருவாய் மட்டும் வளர்ச்சியல்ல**

இவற்றோடு ஒரு நாட்டின் நிலைத்த வளர்ச்சியை (sustainable Development) அளவிடும் 17 குறிக்கோள்களை உள்ளடக்கிய SDG (sustainable Development Goals) என்ற அளவீடு அய்.நாவால் பரிந்துரைக்கப்பட்டு நாடுகளின் வளர்ச்சி அதனடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. இந்த 17 இலக்குகள் முறையே 1) வறுமை ஒழிப்பு, 2) பட்டினியின்மை, 3) உடல் நலன் மற்றும் நலமான வாழ்வு, 4) தரமான கல்வி, 5) பாலின சமத்துவம், 6) தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம், 7) அனைவருக்குமான தூய்மையான எரிசக்தி, 8) நல்ல வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி, 9) தொழில்துறை - புதுமைகள் - உட்கட்டுமானம், 10) குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள், 11) நிலைத்த நகரங்களும் சமூகங்களும், 12) நிலைத்த நுகர்வும், உற்பத்தியும்,13) காலநிலை மாற்றத்திற்கான செயல்பாடுகள், 14) கடல்வாழ் உயிரினங்கள், 15) தரைவாழ் உயிரினங்கள், 16) அமைதி - நீதி மற்றும் உறுதியான நிறுவனங்கள், 17) குறிக்கோள்களை எட்டுவதற்கான கூட்டு என்பவை ஆகும். இவற்றை 2030க்குள் எட்டுவதற்கான தெளிவான வரையறைகள் அடங்கிய 17 குறிக்கோள்களைக் கொண்டு நாட்டின் நிலைத்த வளர்ச்சி அளவிடப்படுகிறது.

இவற்றை அளவிடும் வழிகாட்டிகளாக பள்ளிக் கல்வி பெறாத குழந்தை களின் எண்ணிக்கை, வேலையின்மை விழுக்காடு. சேரிகளில் வாழும் மக்கட் தொகை, மருத்துவப் பணியாளர்களின் எண்ணிக்கை, சிசு மரணங்கள், கழிவு மேலாண்மை போன்ற அளவீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அடிப்படையில் 2020ஆம் ஆண்டுத் தரவுகளின்படி 192 நாடுகளை உள்ளடக்கிய தரவரிசைப் பட்டியலில் 60 மதிப்பெண்களுடன் 117ஆவது இடத்தில் இந்தியா இருப்பது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் தவிர்த்த அத்தனை தெற்காசிய நாடுகளும் இந்தியாவை விட அதிகப் புள்ளிகள் பெற்று முன்வரிசையில் இருக்கின்றன. என்பதையும் இங்கு சேர்த்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

# ‘நீட்’ - ‘சிவன்’ - உக்ரைன்

இந்தியாவிலிருந்து உக்ரைன் நாட்டிற்கு 20 ஆயிரம் பேர் மருத்துவம் படிக்க சென்றிருக்கிறார்கள். போர்ச் சூழலில் அவர்கள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? தனியார் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையை தடுப்பதற்காக நீட் தேர்வைக் கொண்டு வந்தோம் என்று ஒன்றிய ஆட்சி கூறியது. பாஜகவினரும் அப்படித்தான் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் நீட் தேர்வு வந்ததற்குப் பிறகு தான் 20 ஆயிரம் மாணவர்கள் மருத்துவம் படிக்க உக்ரைனுக்கு சென்றிருக்கிறார்கள். காரணம் இங்கே வாங்குகிற கட்டணத்தைவிட அங்கே கட்டணம் மிக மிகக் குறைவு. நீட் தேர்வு தேவையில்லை, 50% மதிப்பெண்கள் எடுத்தாலே உக்ரைனில் மருத்துவம் படிக்க முடியும். இங்கே நீட் தேர்வும் இருக்கிறது, கட்டணக் கொள்ளையும் இருக்கிறது. தனியார் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளையை தடுத்து நிறுத்துவதற்கு ஒன்றிய அரசு என்ன செய்தது? எதுவுமே செய்யவில்லை. அவர்களின் கட்டணக் கொள்ளைக்கு வழி திறந்து வைத்ததுதான் இதில் வேடிக்கை.


நீட் தேர்வில் பெறக்கூடிய கட் ஆஃப் மார்க்கை மிக மிக குறைவாக தளர்த்தி தனியார் மருத்துவக் கல்லூரிகளின் இடங்கள் முழுமையாக பூர்த்தி செய்வதற்கும்; அவர்கள் நிர்ணயித்த கட்டணங்களை வாங்கி கொள்ளையடிப்பதற்கும் வழி திறந்து வைத்தது தான் ஒன்றிய ஆட்சி.

மோடி சொல்கிறார், ‘ஒரு சின்னஞ்சிறு நாட்டில் நமது நாட்டு மாணவர்கள் ஏன் மருத்துவப் படிப்பை படிக்க செல்ல வேண்டும்? இந்தியாவிலேயே மருத்துவத்திற்கான முதலீடு செய்வதற்கு தனியார்கள் முன்வர வேண்டும். அவர்களுக்கான இடங்களை மாநில அரசுகள் ஒதுக்கித் தர வேண்டும்’ என்று மோடி கூறுகிறார். மீண்டும் தனியார் கல்லூரிகளின் கட்டணக் கொள்ளைக்குத் தான் அவர் பேசுகிறாரே தவிர, அரசு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கி வெளிநாடு செல்லும் மாணவர்களை தடுக்கும் கவலை அவருக்கு சிறிதும் இல்லை.

விடிய விடிய உக்ரைன் நகரில் இரஷ்ய விமானங்கள் குண்டுகளை வீசிக் கொண்டிருக்கின்றன. இங்கே விடிய விடிய சிவனுக்கு பூஜை போட்டுக்கொண்டு சிவராத்திரி கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தென்னாட்டின் கடவுளாகப் போற்றப்படும் சிவன், தென்னாட்டு கர்நாடக மாணவனைக் காப்பாற்றக்கூட வரவில்லை. ‘அதர்மம் தலைதூக்கும் போதெல்லாம் அவதாரம் எடுத்து வருவேன்’ என்று கூறிய கிருஷ்ண பகவான் போர் மேகங்கள் சூழ்ந்து இருக்கும்போது மக்களைக் காப்பாற்ற முன் வரவில்லை. கடவுளும் மதமும் மக்களைக் காப்பாற்றுவதில் இருந்து விடைபெற்றுக் கொண்டுவிட்டன.

ஏவுகணைகளும் துப்பாக்கிக் குண்டுகளும் தான் மனித வாழ்வை நிர்ணயித்துக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட போர்ச் சூழலில் நமக்கு எது தேவைப்படுகிறது? போர் இல்லாத உலகம். நாடுகளின் தனித்துவம். அந்தந்த நாடுகளின் இறையான்மை. அங்கே அனைவருக்குமான சமூக நீதி. இது தான் உக்ரைன் நமக்கு சொல்லிக் கொடுக்கின்ற பாடம்.

### அண்ணாவின் அற்புத குணம்



நான் திமுகவுக்கு – அது தேர்தலில் வெற்றி பெறும் வரை அக் கழகத்திற்கு படு எதிரியாக இருந்தவன். தேர்தலுக்குப் பிறகு அண்ணா என் எதிர்ப்பை மறந்து, அடியோடு மறந்து மிக்கப் பெருந்தன்மையோடு நட்பு கொள்ள ஆசைப்பட்டு – என்னை அவர் பிரிவதற்கு முன் இருந்த மரியாதையுடன் நண்பராகவே நடத்தினார். அதன் பயனாக எனக்கும் மக்களிடையே அதிக மதிப்பு ஏற்பட்டதுடன், என் அந்தஸ்தும் அதிகமாயிற்று என்றுகூட சொல்லலாம். அதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்க வேண்டியதும் என் கடமையாகிவிட்டது.

இதன் பயன் திமுகவை பகுத்தறிவுக் கழகமாகவே இருக்க உதவும் என்று நினைப்பதோடு, அண்ணா என்னிடம் காட்டிய அன்பும், ஆதரவும், அளித்த பெருமையும் திமுகவுக்குள் எந்தவிதக் கருத்து வேற்றுமையோ, கட்சி மனப்பான்மையையோ கழகத்திற்குள் புகுத்தி விடாமல் கழகம் பெருமையோடு விளங்கவும், மக்களுக்கு தொண்டாற்றவும் பயன்படும் என்று உறுதி கொண்டிருக்கிறேன். அதற்கேற்ற தன்மைகளை அண்ணா தம்பிமார்களுக்கு ஊட்டியும் இருக்கிறார் என்பதில் அய்யமில்லை.

இப்படிப்பட்ட ஒரு அற்புத குணம் படைத்த அண்ணா முடிவானது தமிழருக்கும் தமிழ்நாட்டிற்கும் பரிகாரம் செய்ய முடியாத நட்டமேயாகும். – விடுதலை 03.02.1969

## ‘காதலர் நாளில்’ மனநல மருத்துவர் சிவபாலன் விளக்கவுரை

# திருமணத்துக்குப் பிறகு தான் உண்மையில் காதலின் தேவையே தொடங்குகிறது

*பிப். 14 அன்று சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய காதலர் நாள் விழாவில் மனநல மருத்துவர் சிவபாலன், காதல் – காதலுக்குப் பிறகான திருமண வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்த ஆழமான உளவியல் சிக்கல்களை விளக்கினார். அவரது உரை:*

ஒரு மனநல மருத்துவராக பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கிறேன். பல கூட்டங்களில் பேசியுள்ளேன். அவைகளில் பொதுவாக, மனதை எப்படி அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்? மன அழுத்தம் இல்லாமல் வாழ்வது எப்படி? இப்படியான தலைப்புகள் தான் அதிகம் இருக்கும். காதல் திருமணம் செய்து கொண்டவர்களின் மத்தியில் பேசுவது ஒரு தனி அனுபவமாக இருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுக்கும் அப்படியான அனுபவமாக இருக்கும் என்றும் நம்புகிறேன்.

காலையிலிருந்தே காதலர் தின வாழ்த்துக்கள் தொடர்ச்சியாக வந்துகொண்டே உள்ளன. Facebook, WhatsApp இப்படி சமூக வலைதளங்களிலும் காதலர் தின வாழ்த்துக்கள் தான் அதிகம் நிரம்பி இருந்தன. இதில் கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், தமிழ்ச் சமூகம் போல் வேறெந்த சமூகமும் ‘காதலை’ Romanticize (புனிதம்) செய்வது கிடையாது. வேறெந்த சமூகமும் காதலை இப்படி கொண்டாடி இருக்கிறார்களா ? Romanticize செய்திருக்கிறார்களா ? என்றால் இல்லை. இயல்பிலேயே தமிழர்கள் உணர்ச்சி வயப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதனால் தான் காதலை இந்த அளவிற்கு புனிதப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன். எந்த ஒன்றையுமே புனிதப்படுத்திவிட்டோம் என்றால் அதைப் பற்றி தீவிரமாக நாம் சிந்திக்கமாட்டோம். ஏதோ ஒன்றை சொல்லி வைத்துவிட்டார்கள், அதை நோக்கியே செல்வோம் என்று சென்று கொண்டிருப்போம்.

ஒரு பிரச்சினையை ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதை நாம் முதலில் Romanticize செய்யக் கூடாது. இதைத் தான் சமூக வலைதள மொழியில் ‘Furniture’ உடைப்பது’ (பிம்பத்தை உடைப்பது) என்போம். அப்படி புனிதப்படுத்துதலை நிறுத்திவிட்டு அதனுள் உண்மையாகவே என்ன நடக்கிறது என்று பார்த்தோம் என்றால் அதன் உண்மைத் தன்மை புரிய வரும். இந்த ‘Furniture’ உடைப்புக்கு முன்னோடி பெரியார் தான். அவர் காதலைப் பற்றி என்ன கூறியிருக்கிறார் என்பதை ‘குடிஅரசி’ல் அவர் எழுதியதை அப்படியே இங்கு படிக்கிறேன்.

*“காதல் என்பது ஆசை, காமம், நேசம், மோகம், நட்பு என்பவைகளைவிட சிறிது கூட சிறந்தது அல்லவென்பது விளங்கிவிடும். அதற்கு ஏதேதோ கற்பனைகளைக் கற்பித்து ஆண் பெண்களுக்குள் புகுத்திவிட்டதால் ஆண் பெண்களும் தங்கள் உண்மையான காதலர்கள் என்று காட்டிக் கொள்ள வேண்டுமென்று கருதி, எப்படி பக்திவான் என்றால் இப்படி இப்படி எல்லாமிருப்பான் என்று சொல்லப்பட்டதால் அனேகர் தங்களை பக்திவான்கள் என்று பிறர் சொல்லவேண்டுமென்று கருதி பூச்சுப் போடுவதும், பட்டை நாமம் போடுவதும், சதா கோவிலுக்குப் போவதும், பாட்டுகள் பாடி அழுவதும், வாயில் சிவசிவ என்று சொல்லிக் கொண்டிருப்பதுமான காரியங்களைச் செய்து பக்தி மான்களாகக் காட்டிக் கொள்ளுகின்றார்களோ அதுபோலும், எப்படிக் குழந்தைகள் தூங்குவது போல் வேஷம் போட்டு கண்களை மூடிக் கொண்டிருந்தால் பெரியவர்கள் குழந்தைகளின் தூக்கத்தைப் பரிசோதிப்பதற்காக “தூங்கினால் கால் ஆடுமே” என்று சொன்னால் அந்தக் குழந்தை தன்னைத் தூங்குவதாக நினைக்க வேண்டுமென்று கருதி காலைச் சிறிது ஆட்டுமோ அதுபோலும், எப்படி பெண்கள் இப்படி இப்படி இருப்பதுதான் கற்பு என்றால் பெண்கள் அதுபோலெல்லாம் நடப்பது போல் நடப்பதாய் காட்டித் தங்களைக் கற்புள்ளவர்கள் என்று காட்டிக் கொள்ளுகின்றார்களோ அதுபோலும் உண்மையான காதலர்களானால் இப்படி இருப்பார்களே என்று சொல்லிவிட்டால் அல்லது அதற்கு இலக்கணம் கற்பித்து விட்டால் அதுபோலவே நடந்து காதலர்கள் என்பவர்களும் தங்கள் காதலைக் காட்டிக் கொள்ளுகிறார்கள். இதற்காகவே அவர்கள் இல்லாத வேஷத்தையெல்லாம் போடுகிறார்கள். அதை விவரிப்பது என்றால் மிகவும் பெருகிவிடும்.*



- காதல் குறித்து பெரியார் கூறியது போல் வேறு எந்த தத்துவ சிந்தனையாளர்களும் கூறியது இல்லை.
- யாரோ ஒருவர் சொல்லிச் சென்றதை கண்முடித்தனமாக பின்பற்றி காதலைப் புனிதப்படுத்துகிறோம். அன்பு, நட்பு தவிர, காதலில் எந்தப் புனிதமும் இல்லை.

*ஆகவே ஆசையைவிட, அன்பை விட, நட்பைவிட காதல் என்பதாக வேறு ஒன்று இல்லை என்றும், அவ்வன்பு, ஆசை, நட்பு ஆகியவைகள் கூட மக்களுக்கு அஃறிணைப் பொருள்கள் இடத் திலும் மற்ற உயர் திணைப் பொருள்களிடத்திலும் ஏற்படுவது போல் தானே ஒழிய வேறில்லையென்றும் அதுவும் ஒருவருக்கொருவர் அறிந்து கொள்வதிலிருந்து, நடவடிக்கையில் இருந்து, யோக்கியதையில் இருந்து, மனப்பான்மையில் இருந்து, தேவையில் இருந்து, ஆசையில் இருந்து உண்டாவதென்றும் அவ்வறிவும் நடவடிக்கையும் யோக்கியதையும் மனப்பான்மையும் தேவையும் ஆசையும் மாறக் கூடியதென்றும் அப்படி மாறும் போது அன்பும் நட்பும் மாறவேண்டியது தான் என்றும், மாறக் கூடியதுதான் என்றும் நாம் கருதுகின்றோம்”. (குடி அரசு 18.01.1931)*

இப்படி ஒரு மிக அற்புதமான கருத்தை காதல் குறித்து வேறு யாரும் இதுவரை கூறவில்லை.

மனநல மருத்துவம் படிக்க வேண்டும் என்றால், தத்துவம் படித்துவிட்டுத்தான் வர வேண்டும். எவ்வளவோ தத்துவங்களைப் படித்துள்ளேன். சாக்ரடீஸ், பிளாட்டோ போன்றவர்களின் தத்துவங்களையும் படித்துள்ளேன். எதையும் நான் மிகைப்படுத்தி கூறவில்லை. நான் பயின்ற மனநல பாடங்களில் எந்த தத்துவியலாளரும் காதலை இப்படி விவரிக்கவில்லை. என்ன காரணமென்றால் பெரியார் தத்துவவாதி அல்ல. எதார்த்தவாதியாக இருந்துள்ளார். தத்துவங்கள் என்றாலே என்ன, கட்டுக்கதைகள் தானே! அப்படி எந்த கட்டுக்கதைகளும் இல்லாமல் எதார்த்தத்தில் என்ன உள்ளதோ அதை பேசுவது; அவர் தான் பெரியார்.

பெரியார் கூறியபடி பார்த்தோமென்றால், ‘மற்றவர்களிடம் நாங்கள் சிறந்த காதலர்கள் என்று காட்டிக் கொள்வதற்கு செய்கிறோமே ஒழிய, அன்பு நட்பை விட வேறு என்ன பெரியதாக இருக்கிறது’ என்று கேட்கிறார். கிட்டத்தட்ட சமூகத்திலும் அதே நிலைதான் தற்போதும் நிலவுகிறது. முகநூலில் மனைவியைப் பற்றி பத்து பக்கத்திற்கு எழுதுவார்கள். ஆனால் வீட்டில், தலைவலி என்றால் மனைவிக்கு தைலம் பாட்டிலைக் கூட எடுத்து கொடுக்க மாட்டார்கள். எனவே, இவையெல்லாம் மற்றவர்களிடம் காட்டிக் கொள்வதற்காகத்தான். எதார்த்தத்தில் அப்படி நாம் இருக்கிறோமா ? எதார்த்தத்தில் இல்லாத ஒன்றை ஏன் பூசி மொழுகுகிறோம்? எனவே காதலை ஏன் புனிதப் படுத்துகிறோம் என்றால் யாரோ ஒருவர் சொல்லிவிட்டுப் போனதை காப்பாற்ற புனிதப்படுத்துகிறோம்.

காதலை புனிதப்படுத்துவதில் தமிழ் சினிமாக்களுக்கு அதிகம் பங்கு உள்ளது. உண்மையான காதல் என்றால் என்ன? பொய்யான காதலென்றால் எது? நட்பு என்றால் எது ? Infatuation (மோகம்) என்றால் என்ன? என்பவைகளைப் பற்றி சாக்ரடீஸை விட அதிகமான தத்துவங்களை தமிழ் சினிமாக்கள் தான் கூறியிருக்கின்றன. ஏற்கெனவே இப்படியான கற்பிதங்களை உருவாக்கி வைத்திருப்பதனால், உண்மையான காதலர்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று நாம் வெளியில் காட்டிக் கொண்டிருக்கிறோம். இன்று காலையில் இருந்து நடந்து கொண்டிருப்பதும் அப்படித் தான். காதல் என்பது அன்பை விட, நட்பை விட பெரிய விடயம் கிடையாது. அதை Romanticize செய்யத் தேவையில்லை. எதார்த்தத்தில் ஒரு மனிதனுடன் இணக்கமாக வாழ முடிகிறதா? எதார்த்தத்தில் ஒரு மனிதனை உங்களால் சகித்துக் கொள்ள முடிகிறதா? எதார்த்தத்தில் ஒரு மனிதனை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா ? இது மூன்றையும் உங்களால் செய்ய முடிகிறது என்றால் அதற்கு எந்த பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். அதற்கு காதல் என்று வைத்துக் கொண்டு, அதற்கு சிறப்பு இருக்கிறது என்று கூறத் தேவையில்லை.

சினிமாக்களில், உனக்காக அது செய்கிறேன், இது செய்கிறேன் என்று கூறுவார்கள். அதில் என்ன இலக்கு என்றால் திருமணம் தான். திருமணம் நடந்தால் அந்த காதல் முடிந்தது. எனது காதல் வெற்றியடைந்துவிட்டது என்று அர்த்தப்படுத்தி வைத்துவிட்டார்கள். வேறொருவரிடம் கேட்டால் எனது காதல் தோல்வி என்பார். ஏன் என்றால்? திருமணம் நடக்கவில்லை. கிட்டத்தட்ட காதல் என்றாலே திருமணம் செய்வது தான் இலக்கு. ஆனால், உண்மை என்னவென்றால் காதலின் தேவையே திருமணத்தில் இருந்து தான் ஆரம்பிக்கிறது. அதற்கு முன் இருப்பதெல்லாம் காதல் கிடையாது. காதல் என்பதே ஒரு Responsibility (பொறுப்பு). காதல் என்பதை ஒரு Commitment (அர்ப்பணிப்பு) என்று சொல்லலாம். நீங்கள் காதலிக்கும் போது, என்ன Commitment, Responsibility இருக்கு ? ஆனால் திருமணத்திற்கு பின்பு நிறைய Responsibility, commitment வருகிறது. பொறுப்புகள் அதிகமாகும்போது சில விடயங்களை விட்டுக் கொடுக்க வேண்டி வரும். அல்லது சில விடயங்களை பிடிக்கவில்லை என்றாலும் செய்ய வேண்டி வரும். காதலுக்கும் திருமணத்துக்குப் பிறகான உறவுக்கும் இது தான்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நாமக்கல் மாவட்டம் வழி காட்டுகிறது; கழக ஏட்டுக்கு 86 சந்தாக்கள்

நாமக்கல் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 4.3.2022 அன்று காலை 11 மணி யளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், மாநில அமைப்புச் செயலாளர் ப.ரத்தினசாமி, மாநிலப் பொருளாளர் சு.துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், காவை ஈஸ்வரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. நாமக்கல் மாவட்டத்தின் சார்பில் முதல் கட்டமாக 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கான 86 சந்தா தொகை 21500 கழகத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

கலந்துரையாடலில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. மடத்துக்குளம் மோகன், தலித் சுப்பையா ஆகியோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. இயக்க வளர்ச்சிக்கு மாதம் ஒருமுறை தெருமுனை கூட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.
3. புதிய பொறுப்பாளர்கள் மற்றும் நாமக்கல் மாவட்ட அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
4. குமாரபாளையம் நகர செயலாளராக செ.வடிவேல் செயல்படுவார் மற்றும் திருச்செங்கோடு ஒன்றிய அமைப்பாளராக விஜயகுமார் மட்டுமே செயல்படுவார் என தீர்மானிக்கப்பட்டது.

கலந்துரையாடல் கூட்டத்தில், நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட அமைப்பாளர் அ.முத்துப்பாண்டி, காளிப்பட்டி பெரியண்ணன், திருச்செங்கோடு நகர செயலாளர் பூபதி, வெண்ணந்தூர் ஒன்றிய அமைப்பாளர் பா.ராமச்சந்திரன், குமாரபாளையம் தண்டபாணி, செ.வடிவேல், பிடல் சேகுவேரா, சுமதி சசினா பள்ளிபாளையம் பிரகாசு, நாகராசு, மேட்டூர் மார்ட்டின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

4-3-2022 அன்று இராசிபுரத்தில் நடந்த நாமக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டக் கலந்தாய்வு கூட்டத்தில், திமுக முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி. பாலு, 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தின் வளர்ச்சி நிதிக்கென ரூபாய் 10,000/-த்தை கழகத் தலைவரிடம் வழங்கினார்.

காவலாண்டியூர் மாதுராஜ் (தமிழன் லேத், குமாரபாளையம்), தனது மகன் திலகன்-சந்தியா ஆகியோருக்கு 4-3-2022 அன்று நடந்தேறிய மணவிழா மகிழ்வாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதியாக ரூ.5,000 /-த்தை கழகத் தலைவரிடம் வழங்கினார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான விடயம். காதலில் தங்களுக்கு பிடித்ததை மட்டுமே செய்து கொண்டிருக்கலாம். ஒன்றாக இருக்கும் நேரத்தில் இருக்கலாம், வேண்டாம் என்றால் வேண்டாம். ஆனால் திருமண வாழ்க்கையில், தங்களுக்கு பிடித்த சில விடயங்களை செய்யாமலிருக்கணும். பிடிக்காத சில விடயங்களை செய்ய வேண்டி வரும். இதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? தயாராக இருக்க என்ன தேவை? நான் ஏன் இந்த இரண்டையும் செய்ய வேண்டும். கல்யாணம் செய்தால் இதை செய்தாக வேண்டுமா? ஏனென்றால் இங்கு உறவு முக்கியம். எனக்கும் உனக்குமான இந்த உறவு முக்கியம். மற்றவைகளை விட இந்த உறவு தான் முக்கியம்.

நாங்கள், உளவியல் ரீதியாக சில செய்முறைகளை, கலந்தாய்விற்கு (Counseling) வருபவர்களிடம் செய்வோம். "எங்களைப் பொருத்தவரை நீங்கள் நோயாளிகள் அல்ல. உங்களின் உறவு தான் பிரச்சினை. உங்களை சரி செய்ய நாங்கள் முயற்சி செய்யவில்லை. உங்களுக்குள் இருக்கும் உறவைத் தான் சரி செய்ய முயற்சிக்கிறோம்" என்று கூறுவோம். எனவே, இந்த உறவு தான், நமது தனி மனித விருப்பு, வெறுப்பை விட முக்கியமான ஒன்று. இந்த உறவின் மேல் எனக்கு பொறுப்பு இருக்கிறது. என்ன பொறுப்பு ? இந்த உறவு நீடிக்குமா ? என்ற பொறுப்பு இருக்கிறது. இந்த உறவு நீடிக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் ? இதற்கு எழுத்தாளர் களும், தமிழ் சினிமாக்களும் என்ன சொல்வார்களென்றால் 'விட்டுக் கொடுக்கனும்'. அவர்களுக்காக இதைக்கூட செய்ய மாட்டியா? என்பது தான் அனைவரும் சொல்லக் கூடிய ஒன்று.

என்னிடம் கலந்தாய்விற்கு வருபவர்கள் அதிகம் பேர் கூறுவது என்ன வென்றால், காதலித்து திருமணம் செய்தார்கள் ஆனால் சண்டை போடுகிறார்கள் என்று கூறுவார்கள். இதில் ஒரு கட்டுக் கதை உள்ளது. காதலித்து திருமணம் செய்தால் சண்டையே வரக்கூடாது என்று நினைத்துக் கொள்கிறார்கள். இது ஒரு கட்டுக் கதைதான். காதலித்து திருமணம் செய்தால் அவர்கள் நன்றாக புரிந்திருப்பார்கள் என்பது. காதல் திருமணம் செய்தால் அவர்கள் மிக சிறப்பாக வாழ்வார்கள் என்று நினைப்பதும் கட்டுக்கதை. குடும்ப நல நீதி மன்றங்களில் இப்போது மூன்றில் இரண்டு பங்கு காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள் தான் விவாகரத்திற்கு வருகிறார்கள். ஏனென்றால், காதலித்தாலும், காதலிக்காமல் வீட்டில் ஏற்பாடு செய்த திருமணமானாலும் ஒரே நிலை தான். திருமணமான பின் இரண்டும் ஒன்று தான். திருமணத்திற்கு முன் எப்படி காதலித்து இருந்திருந்தாலும், திருமணமான பின் நீங்கள் கணவர் தான், நீங்கள் மனைவி தான். இதில் எந்த மாறுதலும் இல்லை. (தொடரும்)

# ஹிஜாப் - பா.ஜ.க. மிரட்டலுக்கு பதிலடி: மதுரையில் கருத்தரங்கம்

திராவிடர் விடுதலைக் கழகம் - தமிழ் தேச மக்கள் முன்னணி இணைந்து நடத்திய "மத வெறியர்களால் தூண்டப்படும் ஹிஜாப் அரசியல்" கருத்தரங்கம் மேலூரில் உள்ள ரஹ்மா திருமண மண்டபத்தில் நடைபெற்றது..

இந்த நிகழ்வில் மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி வரவேற்புரையாற்றினார். தமிழ் தேச மக்கள் முன்னணி மாவட்டத் தலைவர் ஆரோக்கிய மேரி முன்னிலை வகித்தார். மதுரை மாவட்ட செயலாளர் மா.பா மணி அமுதன் தலைமை தாங்கினார். அண்ணா திராவிட மக்கள் முன்னேற்ற கழகப் பொதுச் செயலாளர் பசும்பொன். பாண்டியன், தமிழ் தேச மக்கள் முன்னணி தலைவர் மீ.த.பாண்டியன், தமிழ்நாடு அரசின் முன்னாள் வக்பு வாரிய தலைவர் ஹைதர் அலி, மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் வாஞ்சி நாதன், தமுமுக (ஹைதர் அலி) மாவட்ட துணைச் செயலாளர் ஜாகீர் உசேன் ஆகியோர் கருத்துரை யாற்றினார்கள்..

தமுமுக (ஹைதர் அலி ) மாவட்ட பொறுப்பாளர் பக்ருதீன் நிகழ்விற்கான பல உதவிகளை செய்து கொடுத்தார் தமுமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, திமுக, தமிழ்ப்புலிகள் கட்சி உள்ளிட்ட தோழர்களும் கருங்காலக்குடி , நாவினிப்பட்டி , கீழையூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 200 க்கும் மேற்பட்ட பொது மக்களும் பங்கேற்றனர்.

மதுரை மேலூர் பகுதியில் தொடர்ந்து சிறுபான்மை மக்களுக்கு எதிராக செயல்படும் பாஜக, ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரின் சதி திட்டங்களுக்கு எதிராக மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து செயல்படும் என மாவட்ட செயலாளர் மணிஅமுதன் உறுதியளித்தார்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலின் வாக்குப் பதிவில் தேர்தல் முகவராக இருந்த ஒரு பா.ஜ.க. பிரதிநிதி, ஹிஜாப் அணிந்து வாக்களிக்க வந்த ஒரு பெண்ணை மிரட்டினார். அதைத் தொடர்ந்து வாக்குசாவடியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அந்த வார்டில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

# மின்னூல் தொகுப்பு

பல்வேறு காலகட்டங்களில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய மாநாடுகள், பரப்புரைகள் மற்றும் பொதுக் கூட்டங்களில் தலைவர்களால் பேசப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த உரைகள் அடங்கிய மின்னூல் தொகுப்பு. புத்தகத்தை பெரியார் முழக்கம் பிப் 10, 2022 இதழில் மொத்தமாக 52 புத்தக பட்டியல் வெளிவந்து கழகத் தோழர்களால் பெருவாரியாக பதிவிறக்கி படிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இணைய தளப் பிரிவின் முயற்சியால் மேலும் 45 புதிய தலைப்புகளில் மின்னூலாக்கி பதிவேற்றி உள்ளோம். கீழுள்ள இணைப்பின் வாயிலாகவோ கழகத்தின் இணையதளத்திற்கு சென்று தேவையான புத்தகங்களை தரவிறக்கி படித்துக் கொள்ளலாம். http://dvkperiyar.com/?page_id=17518

**கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நூல் பட்டியல்:** *1. இந்துக்களின் விரோதி யார்? நண்பன் யார்? சிற்றுரைகள் தொகுப்பு 1; 2. கசக்கும் ஒன்றிய(ம்) அரசு - விடுதலை இராசேந்திரன்; 3. கீதையின் வஞ்சகப் பின்னணி - விடுதலை இராசேந்திரன்; 4. சினிமா கண்டு வந்தவன் - விடுதலை இராசேந்திரன்; 5. மக்களைக் குழப்பும் 'நவீனப் பார்ப்பனியம்' 2021 ஆம் ஆண்டு தலையங்க தொகுப்பு - விடுதலை இராசேந்திரன்.*

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி நூல் பட்டியல் :** *6. ஆட்சியை ஆதரித்த பெரியார், போராட்டம் நடத்தாமல் இருந்ததில்லை கொளத்தூர் மணி சிற்றுரைகள்; 7. கொளத்தூர் மணி நேர்காணல் - திவிக வெளியீடு.;*

**திவிக வெளியீடுகள் பட்டியல் :** *8. இந்துவாக சாக மாட்டேன்; 9. இரட்டை வாக்குரிமை பறிபோன வரலாறு - சிவக்குமரன்; 10. இராமர் கோயில்; 11. கல்விக் கொள்கையில் பெரியாரியல் பார்வை; 12. கீழ்வெண்மணியும் பெரியாரும்; 13. குற்றப் பரம்பரை சட்டம் - அதி அசுரன்; 14. சங்கராச்சாரிகளும் - சாய்பாபாக்களும் மக்களை மடையர்களாக்குகிறார்கள் - இயக்குனர் மணிவண்ணன்; 15. சீமானின் செருப்பு வீரம்; 16. தந்தை பெரியார் தலித் மக்களின் எதிரியா? தோழர் சந்திரபோசு; 17. தமிழர் பண்பாட்டுக்கு எதிரானதே, இராமாயணம் - மேதகு பிரபாகரன்; 18. தில்லை நடராசர் கோயிலை அறநிலையத் துறையின் கீழ் ஏற்று நடத்து; 19. தேசியப் பாதுகாப்பு சட்டம் - இரத்து செய்ய வேண்டும்!; 20. நீதிக்கட்சி ஆட்சியின் - தலித் நலத்திட்டங்கள்; 21. நூற்றாண்டு விழா காணும் பச்சைத் தமிழர்; 22. பழனி கோயில் வழிபாட்டு உரிமையை பறித்த பார்ப்பனர்கள்; 23. பார்ப்பன சங்கங்களின் வேண்டுகோளை ஏற்று நீதிக்கட்சி வரலாற்றை நீக்கியுள்ள தமிழக அரசு; 24. பார்ப்பனியம் என்பது மிக மோசமானது - தமிழருவி மணியன்; 25. புதிய உருவெடுத்து வரும் ஆதிக்கத்திற்கு எதிராக, இணைந்து போராடுவோம் - தோழர் நல்லக்கண்ணு; 26. பெரியார் - மார்க்ஸ் - அம்பேத்கர் இயக்கங்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும் - டி.ராஜா; 27. பெரியார் போராட்டங் களில் இணைத்துக் கொண்ட எம் ஆர் இராதா; 28. பெரியாரியம் காலத்தின் கட்டாயம் - ப.பா. மோகன்; 29. பெரியாரியல் பேரொளி' திருவாரூர் தங்கராசு - திவிக வெளியீடு; 30. பெரியாரின் இறுதி சொற்பொழிவுகள் தொகுப்பு; 31. பொது சிவில் சட்டம்: சில வரலாற்றுத் தகவல்கள்; 32. மாணவர்களே, போராட்டத்தை தொடருங்கள்! - கு. முத்துக்குமார்; 33. மானங்கெட்ட இந்திய இராணுவத்தை தாக்கிய வழக்கு; 34. யாகம் - வேள்விகளின் பின்னணி என்ன; 35. வெறுப்பைத் திணிக்கும் மதவெறி கோட்பாடு - தீஸ்டா செதல்வாட்; 36. வேத மதத்தை உயிர்ப்பிக்க வந்த கற்பனையே ராமாயணம் வழக்கறிஞர் பானுமதி; 37. ஹிந்து மத ஆபாசங்கள்*

**போராட்டம் மாநாடு பற்றிய சிறப்பு வெளியீடுகள் :** *38. இலங்கைக்கு இராணுவ உதவி செய்யாதே - தில்லியில் காயக்கட்டு ஊர்வலம்; 39. ஒடுக்கப்பட்டோர் உரிமை முழக்க மாநாடு மதுரை ஏப்ரல் 2005; 40. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கோயில் கருவறை நுழைவுக் கிளர்ச்சி ஜனவரி 30, 2004; 41. தமிழர் உரிமை முழக்க மாநாடு - தாராபுரம் செப் 2004; 42. தமிழர் தன்மான மீட்பு மாநாடு - புதுச்சேரி ஜுலை 2003; 43. நவம்பர் 26 சட்ட எரிப்பு நாள் ஜாதி ஒழிப்பு மாநாடு, மே 2007 தஞ்சை; 44. நூற்றாண்டு விழா குத்தூசி குருசாமி, புலவர் குழந்தை அக்டோபர் 2005, திருப்பூர்; 45. வேத மரபு மறுப்பு மாநாடு - திவிக வெளியீடு.*

தோழர்கள் இந்த வெளியீடுகளை தரவிறக்கி படித்து தத்தமது குழுக்களில் பகிர வேண்டுகிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th March 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN